முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

O.S.No.170/2013

14.06.2019

PW-1: பெயர் : பாலக்குமார்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு தரப்பில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

முதன் பிரதிவாதி தொடர்பான காசோலைகளில் 4ஆம் பிரதிவாதி கையெழுத்திடுவதில்லை. அதன் செயலாளர் தான் கையெழுத்திடுவார். 4ஆம் பிரதிவாதிக்கு என்ன பொறுப்பு என்றால் கணக்குகள் பார்ப்பார். இந்த வழக்கு போட்டபிறகு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னை விசாரித்தார்கள். தவுட்டுப்பட்டி ராஜா என்பவரை தெரியாது. காடுவெட்டி தியாகராஜன் என்பவர் பெயர் தெரியும். அவரை தெரியாது. SC / ST Scholarship தொகையை எந்த வருடத்தில் எடுத்துக் கொண்டதாக சொல்கிறார் என்றால் 2012 - 2013. கேட்டரிங் கல்லூரியில் படிக்கும் மாணவர்களை பாலிடெக்னிக்கில் படிப்பதாகவும் காட்டியுள்ளார்கள். கேட்டரிங் கல்லூரி மாணவர்களுக்கு பாலிடெக்னிக்கில் படிப்பதாக Scholarship வாங்கிக் கொடுத்தார்கள். Scholarship தொகை அரசாங்கத்திலிருந்து வந்ததா என்று எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ. 4 அடிப்படையில் அவ்வாறு சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு முன்பே தெரியும். வா.த.சா.ஆ-4 வாங்குவதற்கு இரண்டு வருடத்திற்கு முன்பே தெரியும். இதன் தொடர்பாக அரசாங்கத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் பெரியப்பாவிடம் சொன்னேன். செயலாளர் தான் பொறுப்பு என்பதால் என் பெரியப்பாவிடம் தகவல் கொடுத்தேன். முதல் பிரதிவாதி நிர்வாகம் பற்றி 2004ல் இருந்து தெரியும். 4ஆம் பிரதிவாதி என்ன பணிகள் பார்த்தார் என்றால் செயலாளர் மற்றும் தலைவருக்கு உதவியாக(Guide) இருந்தார். கல்லூரிகளில் அட்மிஷன் பார்த்தார். மாணவர்களிடம் எவ்வளவு கட்டணம் என்று சொல்வார். இந்த விவரங்கள் கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து தெரியும். 4ஆம் பிரதிவாதி தற்பொழுது அறங்காவலர்ராக இருக்கிறாரா

என்றால் தெரியாது. அவர் அறங்காவலர் பொறுப்பில் இல்லை என்பது 2014ல் தெரியும். என் சகோதரர் 4ஆம் பிரதிவாதி அ.வ.எண். 41/2016 துறையூர் முனிசிப் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 4ஆம் பிரதிவாதியை வாதியாக மாற்றி உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை உச்சநீதிமன்றம் ரத்து செய்து விட்டது என்றால் தெரியாது. 1ஆம் பிரதிவாதி அறக்கட்டளையின் பெயரில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வீடியோவில் நான் உள்ளேனா என்றால் சரிதான். 4ஆம் பிரதிவாதியும் உள்ளார்கள். D.S.P. அலுவலகத்திற்கு நான் மாலையில் சென்றேன். காலையில் யார் சென்றார்கள் என்று தெரியாது. புகாரை நான் தான் கொடுத்தேன். ஸ்காலர்சிப்பிலும் வங்கியின் நடவடிக்கையிலும் ஏமாற்றி உள்ளார்கள் என்றும். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லியுள்ளேன். வங்கியில் இருந்து பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்றால் தெரியாது. நான் வங்கியிடம் கேட்டேன். அதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. எந்த வருடம் என்றால் ஞாபகமில்லை.

(1, 2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது).